DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.7

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ராமராஜ் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 5th day of February, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது ஏழாயிரம்பண்ணை பிர்கா, ஈ.ரெட்டியப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.05.2022ம் தேதி நான் விஜயகரிசல்குளம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணியில் இருந்தபோது, மாலை சுமார் 06.30 மணிக்கு நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, விஜயகரிசல்குளம் கிராமத்தில் எனக்கு தெரிந்த நபர் ஒருவர் என்னை கைபேசியில் தொடர்பு கொண்டு துர்க்கை அம்மன் கோவில் பின்புறம் அமைந்துள்ள ராமசாமி (எ) ஜெயராஜ் என்பவரின் வீட்டின் மாடியில் காயத்ரி என்ற ராமசாமியின் மருமகளும், மற்றும் அவருடைய 4 மாத குழந்தையும் இறந்துகிடப்பதாகவும் தெரிவித்தார். நான் உடனே எனது உதவியாளருக்கு தகவல் அளித்துவிட்டு நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் செல்வதற்கு முன்பாகவே காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, காவல்துறையினர் அங்கு இருந்தனர். நான் பார்க்கும் போது ராமசாமி (எ) ஜெயராஜ் என்பவரின் வீட்டின் மாடியில் 2 பிரேதங்கள் கிடந்தது. அப்போது இரவு

08.45 மணிக்கு சாத்துூர் உபகோட்டத்தின் காவல் துணை கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் ஆகியவற்றை என் முன்னிலையிலும், எனது உதவியாளர் முன்னிலையிலும் தயார் செய்தார். அந்த பார்வை மகஜரில் நானும், தலையாரியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் இரவு 09.45 மணிக்கு சம்பவம் நடந்த அறையிலிருந்து இரண்டு எவர் சில்வர் டம்ளர், ஒரு பிளாஸ்டிக் பால் பாட்டில், நோக்கியா பட்டன் செல்போன் ஒன்று, ரெட்மி செல்போன் ஒன்று, டைரியிலிருந்து கிழித்து எழுதப்பட்ட காகிதம் ஒன்று மேலும் டைரி ஒன்று ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் காவல் துணை கண்காணிப்பாளர் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியிலும் நானும், தலையாரியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆகும். சம்பவம் நடந்த அறையிலிருந்து இரண்டு எவர் சில்வர் டம்ளர் சா.பொ.1 வரிசை(2 எண்ணம்), ஒரு பிளாஸ்டிக் பால் பாட்டில் சா.பொ.2, டைரியிலிருந்து கிழித்து எழுதப்பட்ட காகிதம் ஒன்று சா.பொ.3, டைரி ஒன்று சா.பொ.4 ஆகும். பின்னர் சுமார் 13 தினங்கள் கழித்து 08.06.2022ம் தேதி காலை 09.00 மணியளவில் நானும், எனது உதவியாளரும் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, கொத்தாளமுத்து என்பவர் என் முன்னிலையில் ஆஜராகி எனது மனைவி காயத்ரியையும், தனது மகன் கோகுல் ரக்சனையும் தான் தான் கொலை செய்ததாகவும், கொலை செய்த விதம் குறித்தும் என்னிடம் வாக்குமூலம் அளித்தார். என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தை என்னுடைய மடிக்கணினியில் பதிவு செய்த பின்னர் தனியே ஒரு அறிக்கை தயார் செய்து எதிரி கொத்தாளமுத்துவை வெம்பக்கோட்டை காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்றேன். ஆஜர் எதிரி தான் கொத்தாளமுத்து ஆவார். ஆஜர் எதிரி என்னிடம் அளித்த வாக்குமூலம் அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் 10.45 மணிக்கு காவல் அதிகாரிகள் ஆஜர் எதிரியை கைது செய்தனர். பின்னர் ஆஜர் எதிரி காவல்துறையினர் விசாரிக்க எங்கள் முன்னிலையல் எவ்வித வற்புறுத்தலும்

இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச்சென்றால் விஜயகரிசல்குளம் – கோட்டைபட்டி ரோட்டில் சம்பவத்திற்கு பயன்படுத்திய துண்டை எடுத்து செய்தாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆகும். பின்னர் ஆஜர் எதிரியை மதியம் 12.15 மணியளவில் காவல்துறையினர் எங்களுடன் விஜயகரிசல்குளம் – கோட்டைபட்டி ரோட்டிற்கு அழைத்துச் சென்றபோது, ஒரு வேலிக்குள் கேரி பைக்குள் சுற்றி மறைத்து வைத்திருந்த கருப்பு வெள்ளை சிவப்பு பார்டர் போட்ட ரத்தக்கறை மற்றும் மஞ்சள் கறை படிந்திருந்த துண்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த துண்டை சாத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியிலும் நானும், தலையாரியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அத்தாட்சி அ.சா.ஆ.9 ஆகும். ஒரு வேலிக்குள் கேரி பைக்குள் சுற்றி மறைத்து வைத்திருந்த கருப்பு வெள்ளை சிவப்பு பார்டர் போட்ட ரத்தக்கறை மற்றும் மஞ்சள் கறை படிந்திருந்த துண்டு சா.பொ.5 ஆகும். சம்பவத்திற்கு பின்னர் ஆஜர் எதிரி தனது இருசக்கர வாகனத்தில் கோவில்பட்டி சென்றதாகவும், கோவில்பட்டி புதிய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள இருசக்கர வாகன நிறுத்தும் நிலையத்தில் தனது வாகனத்தை விட்டிருப்பதாகவும் தெரிவித்தார். அதன் அடிப்படையில் எதிரியை 08.06.2022 ம் தேதி மதியம் 01.45 மணிக்கு கோவில்பட்டி புதிய பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள இருசக்கர வாகன காப்பகத்திற்கு அழைத்துச் சென்றபோது, அவர் தன்னுடைய இருசக்கர வாகனமான TN 67 F 9434 என்ற பதிவு எண் கொண்ட டி வி எஸ் ஸ்டார் சிட்டி என்ற இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டியதை சாத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியிலும் நானும், தலையாரியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். இருசக்கர வாகனத்தை கைப்பற்றியதற்கான அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆகும். எதிரியின் இருசக்கர வாகனத்தின் புகைப்படங்கள் 2 எண்ணம் சா.பொ.6 வரிசை ஆகும்.

இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை–

சம்பவத்திற்கு முன்னர் எத்தனை வருடங்களாக விஜயகரிசல்குளம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகராக பணியாற்றி வருகிறேன் என்றால் கடந்த 2020 வருடம் முதல் பணியாற்றி வருகிறேன். நான் எனது சொந்தஊர் நடுவபட்டியில் குடியிருந்து வருகிறேன். எங்கள் மெனுவல் படி நான் எங்கு வேலை செய்கிறேனோ அங்கு தான் குடியிருக்கவேண்டும் என்றால் சரிதான். விஜயகரிசல்குளம் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலகம் ஊருக்குள் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்னர் எதிரியை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். சம்பத்திற்கு முன்னர் என்னிடம் சான்றிதழ் வாங்க எதிரி வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். எதிரி என்ன சான்றிதழ் வாங்க எங்கள் அலுவலகத்திற்கு வந்தார் என்று எங்கள் அலுவலக பதிவேட்டை பார்த்தால் தெரியவரும் என்றால் ஆன்லைனில் தான் பதிவிறக்கம் செய்வார்கள், எதிரி என்னை பார்ப்பதற்காக வந்தார். சம்பவத்திற்கு முன்னர் ஆஜர் எதிரி என்னை பார்க்க வந்துள்ளதாகவும், சான்றிதழ் வாங்க வந்ததாகவும் கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிரி எங்கள் அலுவலகத்திற்கு வரும் போது காலை 09.00 மணி இருக்கும். அந்த சமயத்தில் அலுவலகத்தில் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இல்லை. எதிரி என்னிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை 4 பிரதிகளாக எடுக்கவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி என்னிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் நகலை காவல்நிலையத்திற்கோ, அருகில் உள்ள நீதிமன்றத்திற்கோ, மேல் அதிகாரிகளுக்கோ தபால் மூலம் அனுப்பினேனா என்றால் இல்லை. நான் எங்கள் அலுவலகத்திலிருந்து காவல்நிலையத்திற்கு செல்லும் போது காலை 10.15 மணி இருக்கும். எதிரி அலுவலகத்திற்கு வந்த விவரத்தை காவல்துறையினரிடம் போன் மூலம் சொன்னேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் சரண்டர் ஆன பின்னரும் நான் என்ன செய்வது என்று தெரியாமல் காவல்நிலையத்திற்கு அழைத்துச்

சென்றேனா என்றால் ஒப்படைப்பதற்காக அழைத்துச் சென்றேன். எங்கள் அலுவலகத்தில் கிராம நிர்வாக அலுவலரின் முத்திரை எப்போதும் இருக்கும் என்றால் சரிதான். என்னிடம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எனது கையெழுத்தின் கீழ் முத்திரையோ, தேதியோ இல்லை என்றால் சரிதான். எதிரி என்னடம் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்காததால் தான் அதில் கிராம நிர்வாக அலுவலரின் முத்திரையோ, தேதியோ இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலம் வழக்கிற்காக காவல்துறையால் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி காவல்நிலையத்தில் வைத்து அளித்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் என்னுடைய கையெழுத்திற்கு கீழ் கிராம நிர்வாக அலுவலரின் முத்திரையோ, தேதியோ இல்லை என்றால் சரிதான். எதிரி காவல்நிலையத்தில் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.5 பார்வை மகஜரிலும் எனது கையெழுத்தின் கீழ் கிராம நிர்வாக அலுவலரின் முத்திரையோ, தேதியோ இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.6 அத்தாட்சியில் எனது கையெழுத்தின் கீழ் கிராம நிர்வாக அலுவலரின் முத்திரையோ, தேதியோ இல்லை என்றால் சரிதான், ஆனால் என்னுடைய பதவி குறித்து எழுதியுள்ளேன். விஜயகரிசல்குளத்திலிருந்து கோட்டைபட்டி எவ்வளவு தூரம் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். சா.பொ.5 ரத்தக்கறை படிந்த துண்டை கேரி பையுடன் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.9 அத்தாட்சியில் மேற்படி சா.பொ.5ல் உள்ள பார்டர் குறித்த சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.10 அத்தாட்சியில் எதிரி இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.10 அத்தாட்சியில் எனது கையெழுத்தின் கீழ் கிராம நிர்வாக அலுவலரின் முத்திரையோ, தேதியோ இல்லை என்றால் சரிதான். பார்வை மகஜர், வரைபடம், அத்தாட்சி போன்ற ஆவணங்கள் அனைத்துமே வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால்

சரியல்ல. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த சான்று பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சா.பொ.4 டைரியில் யாருடைய டைரி என்று பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி டைரியில் முதல் பக்கம் மட்டும் தான் எழுதப்பட்டுள்ளது, அதன்பின் உள்ள பக்கங்களில் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒருநபர் டைரி எழுதும் போது தொடர்ச்சியாகத்தான் எழுதுவார்கள் என்றால் அவ்வாறு சொல்லமுடியாது. பொதுவாக ஒருநபர் டைரி எழுதும் போது தொடர்ச்சியாகத்தான் எழுதுவார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சா.பொ.3 டைரியின் தாள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் போலீஸாரின் கையிருப்பு சாட்சி என்பதால் போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>